# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:157** **தேதி:20.07.2014**

**BSNL-MTNL இணைப்பு தொடர்பான BSNL ஊழியர் சங்க கூட்ட முடிவுகளும், FORUM கூட்ட முடிவுகளும்.**

அன்பார்ந்த தோழர்களே,

**BSNL-MTNL இணைப்பு தொடர்பாக விவாதிக்க BSNL ஊழியர் சங்கத்தால் அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம்** 19.07.2014 அன்று டெல்லியில் உள்ள K.G.போஸ் பவனில் நடைபெற்றது. தோழர் V.A.N.நம்பூதிரி தலைமையில் நடைபெற்ற அந்தக் குழுவின் கூட்டத்தில் அதில் உறுப்பினர்களாக உள்ள கீழ்கண்ட தோழர்கள் அனைவரும் பங்கேற்றனர். தோழர்கள் V.A.N.நம்பூதிரி தலைவர், தோழர் P.அபிமன்யு, பொது செயலாளர், துணைபொது செயலாளர் தோழர் அனிமேஷ் மித்ரா, துணை தலைவர்கள் தோழர் P.அசோகா பாபு, தோழர் அதிர் குமார் சென், உதவி பொது செயலாளர்கள் தோழர் முட்கில், தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி, பொருளாளர் தோழர் S.C.பட்டாச்சார்யா, மாநில செயலாளர்கள் தோழர் S.செல்லப்பா, தமிழகம், தோழர் K.மோகனன் கேரளா, தோழர் N.K.நளவாடே மகாராஷ்ட்ரம், அமைப்பு செயலாளர் தோழர் M.C.பாலகிருஷ்ணா.

வந்திருந்த அனைவரையும் வரவேற்ற பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, மாறியுள்ள அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் இந்த பிரச்சனை தொடர்பாக விரிவான அறிமுகத்தை கொடுத்தார். இந்தக் குழுவின் அமைப்பாளரான துணை தலைவர் தோழர் P.அசோகா பாபு விவாதத்திற்கான குறிப்பை முன்வைத்தார்.

BSNL-MTNL இணைப்பு தொடர்பான இந்த பிரச்சனையில் குழுவின் உறுப்பினர்கள் அதன் சாதக பாதக அம்சங்களை குழுவின் உறுப்பினர்கள் விவாதித்தனர். இறுதியாக MTNLன் பங்கு விற்பனை மற்றும் பொருளாதார கடன்கள் தொடர்பாகவும், ஊழியர் பிரச்சனைகள் தொடர்பாகவும் தீர்வு காணப்படாமல், BSNL-MTNL இணைப்பு தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என்கின்ற ஏகோபித்த முடிவிற்கு இந்தக் குழு வந்துள்ளது.

இறுதியாக பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு தொகுப்புரை நிகழ்த்தியதுடன், தங்களின் பொன்னான நேரத்தை ஒதுக்கி இந்தக் கூட்டத்தில் பங்கேற்றதற்காக இந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கு நன்றி கூறி முடித்து வைத்தார்.

**FORUM OF BSNL UNIONS/ ASSOCIATIONS OF NON EXECUTIVES AND EXECUTIVES-ன் கூட்டம்** 18.07.2014 அன்று புதுடெல்லி ஈஸ்டெர்ன் கோர்ட், NTR லோகல் கவுன்சில் அலுவலகத்தில் தலைவர் FORUM-ன் தோழர் C.சிங் தலைமையில் நடைபெற்றது.

FORUM-ன் அமைப்பாளர் தோழர் V.A.N.நம்பூதிரி வந்திருந்த அனைவரையும் வரவேற்றதுடன் கடந்த கூட்டத்திற்கு பின் நடைபெற்ற நிகழ்வுகளை விவரித்தார். அத்துடன் ஆய்படு பொருட்கள் தொடர்பாகவும் பேசினார். விரிவான விவாதங்களுக்கு பின் கீழ் கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:-

1) டவர்கள், BTS-கள், ஏண்டெனா உள்ளிட்டவைகளை பங்கீடு செய்வது தொடர்பாக BSNL மற்றும் RELIANCE JIO INFOCOM LTD ஆகியவற்றிற்கு இடையே 02.05.2014 அன்று கையெழுத்து இடப்பட்ட MASTER SERVICE ஒப்பந்தம்:- கிடைக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இந்த பிரச்சனை விவாதிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தால் BSNL-க்கு சில வருவாய் வந்தாலும், பங்கேற்றவர்கள் எழுப்பிய சந்தேகங்கள் உட்பட முழுமையாக இந்த பிரச்சனை பரிசீலிக்கப்பட வேண்டும். எனவே இந்த பிரச்சனை தொடர்பாக விவாதிக்க நிர்வாகத்தை சந்திப்பது என முடிவு எடுக்கப்பட்டது.

2) ஓய்வூதியதாரருக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு:- செலவினங்களுக்கான இலாகா (DEPARTMENT OF EXPENDITURE) எழுப்பிய சில வினாக்களுக்கு தற்போது DOT பதிலளித்துள்ள சூழ்நிலையை அமைப்பாளர் விளக்கினார். 2007க்கு முந்தைய ஓய்வூதியதாரர்களுக்கு ஒரு அமைச்சரவைக் குறிப்பு அவசியம். 2007க்கு பிந்தைய ஓய்வூதியதாரர்களுக்கு, முன்னரே தீர்வு காணப்பட்ட சில பிரச்சனைகளின் அடிப்படையில் NOTIONAL FIXATION செய்யலாம் என DOT குறிப்பிட்டுள்ளது. ஓய்வூதிய பட்டுவாடா தொடர்பான 60:40 என்கிற விகிதாச்சாரத்தை பொறுத்த வரை, BSNL நிறுவனம் DOTக்கு வழங்கிய தொகையில் 60%க்குள்ளாகத்தான் 2010ஆம் ஆண்டு வரை ஓய்வூதிய பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாக DOT தெரிவித்து உள்ளது.

78.2% பஞ்சப்படி இணைப்பு கொடுக்கப்பட வேண்டிய தேதியான 01.01.2007 முதல் முழு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பதில் எந்த ஒரு சமரசத்திற்கும் இடம் இல்லை என்ற உறுதியான முடிவில் இந்தக் கூட்டம் இருந்தது. இதற்கேற்றவாறு DOT-யின் உத்தரவுகள் திருத்தப்பட வேண்டும். இதே வழியில், ஓய்வூதிய பட்டுவாடாவில் உள்ள 60:40% என்கிற கட்டுப்பாடு ரத்து செய்யப்பட வேண்டும் என்று FORUM உறுதியாக பிரச்சனையை கையில் எடுக்க வேண்டும்.

இந்த பிரச்சனைகளை தொலைத்தொடர்பு துறை மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் ஆகிய மட்டங்களில் கொண்டு செல்ல வேண்டும். தலைமையின் நன்றி உரையோடு கூட்டம் நிறைவுற்றது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
மாநில செயலாளர்.